# திராவிட இயக்க உணர்வுள்ள இளைஞர்கள் திரண்டனர் காண்!

# “எது அரசியல்? எது விழிப்புணர்வு?” என்ற தலைப்பில் Gen Z இளம் தலைமுறையினருக்கான சிறப்பு சந்திப்பு!

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் குவிந்தனர்!

**சென்னை, ஜூன் 1–**

**சென்னை – அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் ‘Gen Z தி.மு.க.’ என்ற தலைப்பில் இளம் தலைமுறையினருக்கான சிறப்பு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் முதலில் தமிழ்த்தாய் பாடி நிகழ்ச்சி தொடங்கப் பட்டது. தமிழகம் முழுவதிலுமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட Gen Z தலை முறையைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.**

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற GEN Z திமுக என்னும் தலைப்பில், இளம் தலைமுறையினரின் அரசியல் பங்களிப்பு, சமூக ஊடகங்களின் தாக்கம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் மத்தியில் அர சியலின் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், பல்வேறு துறைகளில் ஆர்வ முள்ள இளைஞர்கள் சிறப்புரைகளையும் வழங்கினர்.

**சமூக ஊடக அரசியல்!**

குறிப்பாக, ‘சமூக வலைதளங்களில் களமாடுவோம்’, ‘ஏ.ஐ. யுகத்தில் இன்றைய அரசியல்’ உள்ளிட்ட தலைப்புகளில் இளை ஞர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். சமூக ஊடகங்களை திறம் பட பயன்படுத்தி மக்களுடன் தொடர்பு கொள்ளும் முறைகள், செயற்கை நுண் ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அரசி யல் மற்றும் நிர்வாகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் போன்ற அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.






**GENZ DMK**

இளம் தலைமுறையினரின் அரசியல் விழிப்புணர்வை மேம்படுத்தவும், புதிய தலைமுறையின் சிந்தனைகள் மற்றும் கருத்துகளை அறிந்து கொள்ளவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக கூறப்ப டுகிறது. நிகழ்ச்சியில் பங்கேற்ற இளைஞர் கள், அரசியல், சமூக மாற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான தங்க ளது பார்வைகளை பகிர்ந்து கொண்டு உற்சாகமாக கலந்துரையாடினர்.

**‘Gen Z தி.மு.க.’ சந்திப்பு!**

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்க ளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற இந்த ‘Gen Z திமுக’ சந்திப்பு, இளம் தலைமுறையின ரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் முக்கிய நிகழ்வாக அமைந்தது.

சென்னையில் நேற்று மாலை ‘GenZ DMK’ என்ற பிரம்மாண்ட நிகழ்ச்சியில் தி.மு.க. உணர்வுள்ள இளைஞர்கள் ஒன்று திரண்டனர். இளம்தலைமுறை யினரிடையேதிமுகவின்சித்தாந்தங்களை யும் சமூக நீதிக் கருத்துகளையும் டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்பக் கொண்டு சேர்க்கும் நோக்கில், திராவிட இயக்க உணர்வுள்ள இளைஞர்கள் தங்களின் புதிய மாபெரும் அரசியல் முன்னெடுப்பைத் தொடங்கியுள் ளனர். இதன் ஒரு பகுதியாக, நேற்று (மே 30, சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு சென்னையில் பிரம்மாண்டமான முறை யில் ‘GenZ DMK’ என்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

**திராவிட இயக்கப் பற்றுள்ள இளைஞர்கள்!**

‘ஜென்–இசட்’ (Gen–Z) எனப்படும் முதல் முறை வாக்காளர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களிடம் சமூக ஊடகங்கள் வாயி லாகத் திராவிட இயக்கக் கொள்கைகளை இன்னும் ஆழமாகக் கொண்டு சேர்ப்பதே இந்த நிகழ்வின் பிரதான நோக்கமாகும். திமுக ஆதரவு இளம் தலைவர்கள் மற்றும் வழக்கறிஞர் யாசர் அராபத் (Lawyer Yasar Arafhat) உள்ளிட்ட திமுக ஆதரவு உணர் வுள்ள இளைஞர்கள் தங்களின் சொந்த முயற்சியில் இந்த எழுச்சிமிகு இயக் கத்தை ஒருங்கிணைத்துள்ளனர்.

இது வழக்கமான அரசியல் மேடையோ அல்லது அதிகாரப்பூர்வ உட்கட்சிக் கூட்டமோ அல்ல. கொள்கை ரீதியாகத் திராவிட இயக்கத் தின் மீது பற்றுகொண்ட இளைஞர்களால், முழுக்க முழுக்க தங்களின் முயற்சியில் இந்த நிகழ்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது.

**எதிர்பார்த்ததைவிட அதிகம் கூடிய இளைஞர்கள்**

இதற்கான ஒருங்கிணைப்பு வேலை கள் அனைத்தும் டிஜிட்டல் தளங்களில் மிக ஆக்கப்பூர்வமாக நடந்தன. இதற்காக பிரத் யேக வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டு, சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த கல் லூரி மாணவர்கள், இளம் சோஷியல் மீடியா இன்ஃப்ளூயன்சர்கள், மற்றும் திமுக ஆதரவு மீம் கிரியேட்டர்கள் மின் னல் வேகத்தில் இணைந்துள்ளனர்.

இந்த வாட்ஸ்அப் நெட்வொர்க் மூலமா கவே அரசியல் ரீதியாக அடுத்தகட்ட நகர்வு கள் இதர விவரங்கள் மிக உத்வேகத்து டன் பகிரப்பட்டு வருகின்றன.

முதலில் இந்த விவாதக்கூட்டம் அண்ணா நகர் டவர் பூங்காவில் எளிமை யான முறையில் நடத்தப்படுவதாகத் தான் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், வாட்ஸ் அப் குரூப்கள் வழியாக எதிர்பார்த்ததை விடப் பல மடங்கு அதிகமான திராவிட இயக்க உணர்வுள்ள இளைஞர்கள் ஆயி ரக்கணக்கில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்ததால், நேற்று மாலை 4 மணிக்கு சென்னை அண்ணா அறிவால யத்தில் நிகழ்ச்சி நடந்தது.

விவாதத்தின் முக்கிய விவாதமாக 2K கிட்ஸ் மொழியில் திராவிட சித்தாந்தம், இன்ஸ்டா ரீல்ஸ் மற்றும் மீம்ஸ்களில் வாழும் இந்தத் தலைமுறையிடம், திரா விட இயக்கத்தின் சாதனைகளையும், சமூக நீதிக் கருத்துகளையும் அவர்களின் சொந்த ‘ஸ்லாங்’-கில் (Gen-Z Slang) நேர்ம றையாகவும் சுவாரசியமாகவும் எப்படிக் கொண்டு சேர்ப்பது? இளைஞர்களின் புதிய ஐடியாக்கள்: எந்தவித கட்சி ஃபார்மா லிட்டிகளும் இன்றி, இளைஞர்கள் தங்களின் புதிய சிந்தனைகளையும், ஆக்கப்பூர்வமான கருத்துகளையும் வெளிப்படையாகப் பேச இந்த மேடை முழு சுதந்திரம் வழங்கியது.


டிஜிட்டல் மீடியா வியூகம் என்ற வகை யில் சமூக வலைத்தளங்களில் சமூக நீதி– பெரியாரியக் கருத்துக்களை அடுத்தகட்டத் திற்கு எடுத்துச் செல்ல, ஒரு புதிய, துடிப்பான டிஜிட்டல் படையை உருவாக்குவது அவர் களின் பிரதான இலக்காகும். திராவிட இயக்க உணர்வுள்ள இளைஞர்கள் தங்க ளின் கொள்கைப் பற்றால் வாட்ஸ்அப் மூலம் ஒருங்கிணைந்து நடத்தும் இந்த ‘GenZ DMK’ நிகழ்ச்சி, தமிழக இணையவா சிகள் மற்றும் இளம்தலைமுறையினர் மத்தியில் பெரும் வரவேற்பையும் எதிர் பார்ப்பையும் ஏற்படுத்தியது.

## எதிர்காலம் நம்பிக்கை அளிக்கிறது!

**கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:**

**“#GenZDMKMeetup: எதிர்காலம் நம்பிக்கை அளிக்கிறது! எதிர்க்கட்சி என்றாலும் energy கூடுகிறது. இதுதான் திமுக! வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!”**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – 30.05.2026**




*இன்றைக்கு ஆட்சி செய்யக்கூடியவர்கள் அரசாங்கம் நடத்தக் கூடியவர்கள் களத்திலே செயல்பட்டார்கள் என்றால் அவர்களை விமர்சிக்கும் ஒற்றை எதிர்க்கட்சியாக திமுக செயல் படும் என்பதில் எந்த விதமான மாற்று கருத்தும் இல்லை. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடியவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் சமூக வலைதளத்தில் அரசியல் செய்வதால் அவர்களை எதிர் கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் பாணியில் அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும் அதற்கு GenZ தலைமுறையாக இருப்பவர்கள் இன்றைக்கு சமூக வலைதளத்தில் களமாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது*

**-சமூக வலைதளத்தில் களமாடும் என்ற தலைப்பில் அட்வகேட் யாசர் பேசியது**

---

## எதையும் தாங்கும் – சந்திக்கும் தி.மு.க. பொய்ப்பிரச்சாரங்களை முறியடிக்கும் மாநிலத்தின் கொள்கை – நம் மாநிலத்திற்கு எப்படிப்பட்ட ஆட்சி வேண்டும் என்கிற உணர்வைத் தாங்கி

# இளைஞர்கள் தன்னெழுச்சியாக ஒன்று சேர்ந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது!

## Gen Z அமைப்பு நிகழ்ச்சியில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ – டி.ஆர்.பி. ராஜா உரை!

சென்னை, ஜூன் 1 –

**Gen Z இளம் தலைமுறையினர் சந் திப்பில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ பேசியதாவது:–**

என் தந்தையின் இறப்புக்கு பின், என் குடும் பம் வறுமைக்கு சென்றது, அதை எல்லாம் தாண்டி நான் இந்த நிலையில் உள்ளேன் என் றால் தி.மு.க. தான்.தற்போதைய தலைமுறை பேசும் சொற்களுக்கு அர்த்தம் தெரிய தனி அக ராதி வேண்டும் போல, விரைவில் அவற்றை யும் நாங்கள் கற்றுக்கொள்வோம்,

சமூக வலைத்தளத்தில் சிக்கிய மயக்க மான சூழ்நிலையில் ஒரு மாற்றம் அரசியலில் உருவாகியுள்ளது, நட்சத்திரத்திற்கும் மத்தாப் பிற்கும் வித்தியாசம் உள்ளது நட்சத்திரம் எப் பொழுதும் இருக்கும் மத்தாப்பு சிறிது நேரத் திலே அணைந்து விடும். இது மத்தாப்பு ஆட்சிதான்,

**உணர்வுகளைத் தாங்கி வந்துள்ள இளைஞர்கள்!**

முன்பு பேசியவர் 2026 – 27 ல் உள்ளாட்சி தேர்தல் வரும் என கூறினார், சொல்ல முடியாது சட்டமன்றத் தேர்தலும் கூட வரலாம் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. அரசியல் சட்டத்தின் பால் நடக்கக்கூடிய காட்சிகள் அப்படித்தான் உள்ளது, நிலையான ஆட்சி அவர்களிடம் இல்லை. மெஜாரிட்டி இல்லை என்றாலும் எப் படி ஆட்சி நடத்த வேண்டும் என கலைஞர் ஆட்சி செய்து காட்டியுள்ளார், இவர்கள் அதைப் பார்த்து பாடம் கற்றுக் கொண்டால் நல்லது, ஆனால் இவர்கள் பாடம் கற்றுக் கொள்ளாதவர் கள்.

இளைஞர்கள் தன்னெழுச்சியாக ஒன்று



சேர்ந்து இருப்பது, கட்சி சார்ந்து அல்லாமல், மாநிலத்திற்கென்று ஒரு கொள்கை உள்ளது, மாநிலத்திற்கு எது நல்லது, மாநிலத்தில் எந்த கொள்கை உடைய ஆட்சி அமைய வேண்டும் என்ற உணர்வுகளை தாங்கி பிடித்து வந்திருப் பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த கூட்டம் இங்கு நடந்திருப்பதற்கு தமிழ் நாடு காவல்துறைக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும், ஒரு படி மேலே சென்று காவல்துறையின் அமைச்சராக உள்ள முதல மைச்சருக்கு தான் நன்றி சொல்ல வேண்டும், இந்த நிகழ்ச்சியை அமைதியான முறையில் வேறு எங்காவது நடத்தி இருந்தால் 50 பேர் தான் கூடியிருப்பார்கள் ஆனால் இப்பொழுது 500க்கும் மேற்பட்டோர் கூடியுள்ளனர்.

வாடகைக்கு பிடித்திருந்த தனியார் மண்டப உரிமையாளர்களை மிரட்டி, Gen Z அமைப்பு நிகழ்ச்சி நடத்த விடாமல் காவல்துறை செயல் உள்ளது, அண்ணா வழியில் கலைஞர் பாதை யில் நடப்போம் என நீங்கள் முடிவு செய்தீர்கள், அதனால் தான் காவல் துறையால் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் இந்த கூட்டம் நடைபெறுகிறது,

Gen Z தலைமுறையை குற்றம் சொல்லக் கூடாது அதற்கு முந்தைய தலைமுறையான அவர்களின் பெற்றோர்கள் தான் காரணம், திராவிடத்தால் படித்து, பணிகளைப் பெற்று நல்ல இடத்திற்கு சென்றவர்கள், நடிகர் நடிகை களை குழந்தைகளுடன் பார்த்தவர்கள், அரசி யல் செய்தி வந்தால் உனக்கு எதற்கு அரசியல் உள்ளே சென்று படி என்று சொன்னதுதான் அவர்களின் தவறு. இந்தத் தலைமுறையை அரசியல் படுத்த தவறியது நமது தவறு, தலை முறைதான். இந்த தடுமாற்றத்திற்கு காரணம் இளைஞர்கள் அல்ல அவர்களை அரசியப்ப டுத்த தவறிய அதற்கு முந்தைய தலைமுறை தான்.

**வருங்காலம் உங்கள் கையில்!**

சட்டத்துறை இங்கு இருப்பதற்கான கார ணம் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்பதை சொல்வதற்காக தான், வருங்காலம் உங்கள் கையில் வருங்காலத்தில் தலைமை ஏற்கப் போவது நீங்கள், சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் அதற்கான வழி காட்டியாக மட்டுமே நாங்கள் இருப்போம்.

வலைதளத்தில் நடக்கக்கூடிய குற்றங் களுக்கு உடனடியாக புகார் அளித்து தீர்வு காணப்படும், ஆனால் அண்ணா வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு. கண்ணியத்து டன் களம் ஆடவேண்டும். அவர்கள் பாணியில் எதிர்கொள்ளுங்கள் ஆனால் அவர்கள் மொழியை பயன்படுத்தாதீர்கள், அவர்களின் மொழி என்பது அருவருக்கத்தக்கது, அதை



நாமோ நம் குழந்தைகளோ கற்றுக் கொள்ளக் கூடாது.

உங்களின் பேச்சு சுதந்திரம் கருத்து சுதந்தி ரத்தை பறிக்கும் வகையில் யார் தலையிட்டா லும் திமுகவின் சட்டத்துறை உங்களுடன் துணை நிற்கும். தமிழ்நாடு முழுவதும் வழக்கறி ஞர் அணியில் 11 ஆயிரம் உறுப்பினர்கள் உள் ளனர். தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் இதற்காக ஒரு தனிக்குழு அமைக்கப்பட உள் ளது, அதற்கான அறிவிப்பு இன்னும் ஓரிரு நாட் களில் வெளியாகும், தமிழ்நாட்டில் உங்களுக்கு எந்த பிரச்சினை என்றாலும் நீங்கள் அவர் களை அணுகலாம், முதல் ஆளாக வந்து நிற் பது திமுக வழக்கறிஞர் தான் என்பதை உறுதியு டன் கூறிக்கொள்கிறேன்.

**பொய்ப் பிரச்சாரம் செய்வோருக்கு தண்டனை!**

பொய் பிரச்சாரம் செய்பவர்களுக்கு அதிக பட்சமாக இரண்டு ஆண்டு சிறை தண்டனை வழங்கப்படும், ஒரு நபரின் அடையாளத்தை பயன்படுத்தி வேறு ஒரு நபர் பொய் பிரச்சாரம் செய்தால் அவருக்கு ஆயுள் தண்டனை வரை கிடைக்கக்கூடும், இவ்வாறு பிரச்சாரம் செய்ப வர்களை கண்டறிந்து அவர்களின் தகவல் களை நீங்கள் எங்களுக்கு வழங்குங்கள், அதற் கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

இளம் தலைமுறை வழி தவறி சினிமா மோகத்தில் சென்று விடுவார்கள் என்ற கவலை இருந்தது, அதை அனைத்தையும் நீக்கி நாங் கள் இருக்கிறோம் என்று நீங்கள் நிரூபித்துள்ளீர்கள்.

இவ்வாறு வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பேசினார்.

**கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா பேசியதாவது:–**

இது ஒரு மனதிற்கு மிக நெருக்கமான சம யம், திமுகவை எந்த கொம்பனாலும் அசைக்க முடியாது, இதை ஒரு முறை அல்ல, பல லட்சம் முறை சொல்வதற்கு நீங்கள் உள்ளீர்கள். இந்த நேரத்தில் இதைக் காண தலைவரும், எதிர்க் கட்சித் தலைவரும் இங்கு இல்லை என்ற வருத் தம் மட்டும்தான். அனைத்தையும் தாண்டி கலைஞர் இல்லை என்பது தான். 83 வயதில் அனைத்து சமூக வலைதளங்களையும் பயன்ப டுத்தினார்.

இந்த கூட்டத்திற்கு முதலில் 10 பேர் சந்திப்பு என்று இருந்தது, திமுகவை பார்த்தால் இவர் கள் எல்லாருக்கும் ஒரு பயம் தான், மிசாவைப் பார்த்த திமுக இது என்பது ஒரு சிலருக்கு இன் னும் தெரியவில்லை, சாதாரணமாக விட்டு இருந்தால் 50 பேர் தான் கூடி இருப்பார்கள், ஆனால் இப்போது இது காவல்துறையால் இவ் வளவு பெரிய கூட்டமாக மாறியுள்ளது.

**தமிழ்நாட்டின் மதிப்பு தெரியாமல் நடந்து விட்டது!**

தமிழ்நாடு இந்தியாவில் முதல் மாநிலமாக வளர்ந்து உள்ளது என்றால் பெரியாரும், அண் ணாவும், கலைஞரும், தலைவரும் தான், 10 ஆண்டு கால இருளுக்கு விடியல் கொடுத்த ஆட்சி திமுக. ரொம்ப சுலபமாக சில விஷயம் கிடைத்தால் அதன் மதிப்பு தெரியாது என்பார் கள் அதுபோல சிலருக்கு தமிழ்நாட்டின் மதிப்பு தெரியவில்லை. அதனால் ஒரு சில விஷயம் நடந்து விட்டது.

அடிக்க அடிக்க மேலும் வளர்ச்சி பெறும் இயக்கம் தி.மு.க., இன்று மட்டும் சிலரின் துரோக செயல் அல்ல, 75 ஆண்டுகளாக இந்த மண்ணை போட்டு மிதித்தவர்களை எதிர்த்து களம் கண்ட இயக்கம் இது, 75 ஆண்டு காலம் திமுக இருக்க காரணம் கொள்கை பிடிப்பு தான். தமிழ்நாட்டில் கொள்கை பிடிப்பு இருக் கும் வரை யாரும் சீண்டிப் பார்க்க முடியாது.

இந்த சூழலிலும் திமுக கொடியை உயரப் பிடித்துக் கொண்டு செல்பவர் தான் உண்மை யான திமுக காரர். அந்த காலத்தில் காங்கிர சின் அடக்கு முறை, மிசாவின் கொடுங்கோள் காலம், 13 ஆண்டு காலம் ஆட்சியில் இல்லா மல் இருந்த பொழுதும் மீண்டும் ஆட்சி பெற்று இரண்டு ஆண்டுகளில் பொய் பிரச்சாரம் தாள் ஆட்சியை இழந்த திமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றது. இன்று மட்டுமல்ல பொய் செய்தி, பொய் பிரச்சாரம், அன்றும் 1991 எதிர்கொண்டது.

**75 ஆண்டு கால வரலாறு கொண்டது தி.மு.க.!**

1996லும், 2006லும், 2021லும் ஆட்சி பெற்று துவண்டு கிடந்த தமிழ்நாட்டை மீண்டு எழ வைத்தது திமுக தான், தன் எழுச்சியாக யார் உதவியும் இல்லாமல் வாழை வாழையடி வாழையாக உருவான கொள்கை கூட்டம் இருக் கும் பொழுது, இதற்கு தான் சாதாரணமா வரல திமுக காரன் என்று சொல்லுவது. இதற்குப் பின்னால் 75 ஆண்டு கால வரலாறு உள்ளது.

தோல்வியை கண்டு துவண்டு போகாமல், என்னதான் மக்கள் இவ்வாறு செய்துவிட்டார் கள் என்று மக்கள் மீது வெறுப்பை காட்டாமல் இன்னும் மக்களுக்கு அதிகமாக செய்யக்கூடிய இயக்கம்தான் திமுக. இதற்கு ஒரு சிறந்த எடுத் துக்காட்டு நாம் தலைவர் அவர்கள், முடிவு வந்த அடுத்த நாளை கொளத்தூர் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இப்படி ஒரு தலைவரை இந்த நாடு எந்த காலத்தில் யாவது பார்த்து உள் ளதா, கொள்கை பிடிப்பு தமிழ்நாட்டின் வளர்ச்சி மீதான அசைக்க முடியாத நம்பிக்கைதான்.

இவற்றையெல்லாம் தாண்டி தமிழ்நாட் டிற்கு திமுக காரன் தவிர வேறு வழி இல்லை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு என்பதை நான் உறு தியாக கூறுவேன், திமுக காரன் என்றால் ஒரு திமிர் இருக்கத்தான் செய்யும், எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது அந்த திமிர் அதிகமாகவே இருக்கும். திமுகவால் மட்டும் தான் குறுகிய காலகட்டத்தில் இத்தகைய வளர்ச்சி தர முடியும் என்பதற்கு அதிகமான சான்றுகள் உள்ளன.

இவ்வாறு டி.ஆர்.பி.ராஜா பேசினார்.